ஓய்வூதியச் சுற்றுநிருபம் இல : 04/2016

எனது இல : ஓவூ/சு.நி./2016
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு-10.
2016.05.31

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,

மாகாணசபைகளினதும் பிரதம செயலாளர்கள்,

திணைக்களத்தலைவர்கள் / முற்படைத்தளபதிகள்,

மாவட்டச் செயலாளர்கள் / உள்ளூர் ஆட்சிமன்றங்களின் தலைவர்கள்,

பிரதேச செயலாளர்களுக்கும்,

**2016.01.01ஆந் திகதிக்குப் பின்னர் ஓய்வுபெறும் அரச ஊழியர்களுக்கு 2005ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறு புதிய காப்புறுதிமுறை ஒன்றை அமைத்தல். (அக்ரஹார)**

2016.04.29ஆந் திகதிய பொது.நி.சு. 12/2005(vi) இன் விதிமுளைகளின் பக்கம் உங்களது பணிவான கவனத்தைச் செலுத்துமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

02. அச்சுற்று நிருபத்தால், தற்போது நடைமுறையிலுள்ள அக்ரஹார முறையினை, அரச சேவையிலுள்ள பங்காளிகளின் சுயவிருப்பத்தின் பேரில் “රිදී යෝජනාක්‍රම” (வெள்ளிமுறை), “රන් යෝජනාක්‍රම” (தங்க முறை), இரு புதுத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து விரிவுபடுத்தவும், ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்காக அக்ரஹார பாதுகாப்பு எனும் பெயரில் புதியதொரு முறையை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

03. அதன் பிரகாரம் இக்காப்புறுதி முறைக்கு ஓய்வூதியர்களிடமிருந்து மாதாந்த பங்களிப்புக்கட்டணம் ரூபா 200 என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அரச பொ.நி.சு. இலக்கம் 12/2005 (vi) இன் 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நியமணங்களின் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்படும் ஒப்பந்தங்களுக்கு கட்டுப்பட்டதுமாகும்.

3.1 2016.01.01ஆந் திகதிமுதல் ஓய்வுபெற்ற சகல அரச ஊழியர்கள் மற்றும் இச்சுற்றுநிருபம் அமுலுக்கு வந்த திகதியிலிருந்து ஓய்வுபெறும் சகல அரச ஊழியர்களும் கட்டாயம் இத்திட்டத்தின் பங்காளிகளாக வேண்டும்.

3.2 இச்சுற்று நிருபத்தின் விதிமுறைகள் அமுலாகும் திகதி முதல் பங்களிப்புக்கட்டணம் அறவிடப்படுவதுடன், 2016.01.01திகதி முதல் சுற்றுநிருபம் அமுலுக்கு வரும் திகதி வரையிலான காலத்துக்கு நிலுவைக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

3.3. இதன் பிரதிபலன்களைப் பெறும் உரிமை அங்கத்தவருக்கு மாத்திரமே வழங்கப்படுவதுடன், அங்கத்துவக்கட்டணம் அறவிடப்பட்ட தினத்துக்குப் பின்னர் ஏற்படும் சம்பவங்களுக்கும் மற்றும் நிலைமைகளுக்கும் பிரதிபலன்களைப் பெறலாம்.

3.4 70 வயதுவரை பிரதிபலன்களைப் பெறலாம்.

3.5 ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் அங்கத்துவக் கட்டணம் ஓய்வூதியத் திணைக்களம் மூலம் அறவிடப்பட்டு மாதாந்தம் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்துக்கு மீளளிப்புச் செய்யப்படும்.

3.6 அங்கத்தவர் பிரதிபலன்களைப் பெறுவதற்கான விண்ணப்பம் சரியானதும் உண்மையானதுமென கிராம உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தபட்டு தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்துக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. அரச மற்றும் மாகாண சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சகல ஓய்வூதியர்களுக்கும் இக்காப்புறுதியின் பிரதிபலன்கள் உரித்தாகும்.

05. 2016.01.01ஆந் திகதிக்கு பின் ஓய்வுபெறும் ஏதேனுமொரு அரச ஊழியர் ஓய்வுபெறும் மாதத்தில் அக்ரஹார காப்புறுதி முறைக்கு அரச ஊழியர் என்ற வகையில் நடைமுறையிலுள்ள காப்புறுதியின் கீழ் அங்கத்துவக் கட்டணம், உரிய நிறுவனத்தால் அறவிடப்பட வேண்டியதுடன் அதற்கு அடுத்துவரும் மாதத்திலிருந்து ஓய்வூதியர் என்ற வகையில் ரூபா 200/= மாதாந்தக் கட்டணத்தையும், ஓய்வுதியம் வழங்கத்தாமதமாகும் சமயத்தில் ஓய்வுபெறும் மாதத்துக்கு பின்வரும் மாதம் முதல் அக்ரஹார காப்புறுதிக்கான அங்கத்துவ நிலுவைக் கட்டணத்தையும் ஓய்வூதியத் திணைக்களம் மூலம் அறவிடப்பட்டு தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்துக்கு மீளளிப்புச் செய்யப்படும்.

06. மேலே 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதியர்களுக்கு மாத்திரம் இக்காப்புறுதியின் கீழ் பிரதிபலன்கள் உரித்தாவதுடன், அவர்களது பாரியார், அநாதைகள் அல்லது அங்கவீனர்களுக்கு இப்பிரதிபலன்கள் உரித்தாகாது. (ஓய்வூதியர்களுக்கு உரித்தாகும் பிரதிபலன்கள் இணைப்பு 01இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

07. தேசிய காப்புறுதிபொறுப்பு நிதியத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விண்ணப்பப்படிவம் (இணைப்பு 02) இத்திட்டத்தின் கீழ் பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஓய்வூதியர்களினால் பயன்படுத்தவேண்டியதுடன், மேலே 3.6இன் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டு, தலைவர், தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்துக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

08. வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதியர்களுக்கு இத்திட்டத்தின் பங்களிப்பின் பேரில் பிரதிபலன்களைப் பெறமுடிவதுடன், அரச பொது.நி.சு. 2/2005(vi) இல் 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிபலன்

மாத்திரமே உரித்தாகும். வெளிநாட்டிலுள்ள ஓய்வுதியர் தமக்குரிய பிரதிபலன்களை பெற்றுக் கொள்வதற்காக உரிய ஆவணங்களை தாமிருக்கும் நாட்டின் தூதுவர் அலுவலகம் மூலம் உறுதிப்படுத்தி தேசிய காப்புறுதி நிதியத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

09. அக்ரஹார காப்புறுதித்திட்டத்துக்குறிய கழிவுகளை (அறிவீடுகள்) மத்திய தகவல் மையத்தினால் (Pension Menu ————→ Pension Payments ———→ Pension information மூலமாக பிரதேச செயலகங்களுக்கு விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அதேபோன்று ஓய்வூதியர்களுக்கு திணைக்களத்தின் இணையத்தயத்தின் (www.Pension.gov.lk) மூலம் ஓய்வூதிய சம்பளம் வழங்கல் (Payments information) இருந்து அவர்களது அறிவீடுகள் (கழிவுகள்) சம்பந்தமான விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

10. ஓய்வூதியர்களுக்கான அங்கத்துவ அட்டையொன்றை வழங்க தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

11. சிரேஷ்ட பிரஜைகள் காப்புறுதி என்னும் தலைப்பில் 2008.06.27ஆந் திகதி என்னால் வெளியாக்கப்பட்ட ஓய்வூதிய சுற்று நிருபம் 5/2008 இதற்குப் பின்னர் செல்லுபடியற்றதாகும்.

12. இது தேசிய காப்புறுதி நிதியத்தின் ஒப்புதலுடன் வெளியாக்கப்படுகின்றது.

13. மேலதிக விபரங்களுக்கு தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் கீழ்க்குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ளவும்.

பிரதான அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் – 0773423450
உதவி முகாமையாளர் - 0718003190

ஏ.ஜகத் டீ. டயஸ்,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதி :-

| | | |
|---|---|---|
| 01. ஜனாதிபதி செயலாளர் | - | பணிவான அவதானிப்புக்கு |
| 02. பிரதமரின் செயலாளர் | - | பணிவான அவதானிப்புக்கு |
| 03. அமைச்சரவைச் செயலாளர் | - | பணிவான அவதானிப்புக்கு |
| 04. செயலாளர் | - | அரச பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சு |
| 05. செயலாளர் | - | உள்நாட்டலுவல்கள் அமைச்சு |
| 06. செயலாளர் | - | நிதி அமைச்சு |
| 07. கணக்காய்வாளர் நாயகம் | - | உரிய நடவடிக்கைக்காக |
| 08. தலைவர் | - | தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் |

# தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்
**வைத்திய மற்றும் மருத்துவ பதிப்புரிமை விண்ணப்பப் படிவம்**
**அக்ரஹார பாதுகாப்பு காப்பீடு திட்டம் (ஓய்வு பெற்ற)**

தகவல் கொடுக்க வேண்டுமாயின்
குறுந்தகவல் SMS ☐ அல்லது தபால் மூலம் ☐
(தேவையானதுக்கு புள்ளடியிடுக)

விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கம்
(நகல் ஒன்றை இணைக்கவும்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

ஓய்வூதிய இலக்கம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

| உங்களுக்கு தேவையான கூற்றுக்கு முன்னால் (✓) புள்ளடி இடுங்கள் | | |
|---|---|---|
| ஏனைய நோய்களுக்காக | அரசவைத்தியசாலையில் சிகிச்சைபெறல் | |
| | தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெறல் | |
| இருதய அறுவைச் சிகிச்சை | | |
| புற்றுநோய் | | |
| சிறுநீரக நோய் | | |

1. 1. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள்:
   - 1.1 முழுப் பெயர் - (தமிழில்) வண./திரு. / திருமதி. / செல்வி
     ...................................................................................................................
     ஆரம்ப எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்)........................................................
   - 1.2 தனிப்பட்ட விலாசம் (தமிழில்).........................................................................................
   - 1.3 தனிப்பட்ட விலாசம் (ஆங்கிலத்தில்):..................................................
   - 1.4 தொலைபேசி இலக்கம் :- வீடு..................... செல்லிட தொ.பேசி இல.........................
2. நீங்கள் தொழில்புரியும் இடமும் விலாசமும்..............................................................................
   ...........................................................................................................................
3. வாழ்க்கைத் துணையின் விபரங்கள்
   - 3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம்
   - 3.2 பெயர்:..................................................................................................................
   - 3.3 தொழில்புரியும் இடமும் விலாசமும்...................................................................
     ...................................................................................................................
4. வங்கி கணக்கு தொடர்பான விபரங்கள்
   - 4.1 வங்கிக் கணக்கில் உள்ளவாறு பெயர்:.......................................................................
   - 4.2 கணக்கு இலக்கம்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |

   - 4.3 வங்கியின் பெயர.................................... வங்கிக் கிளை..............
5. இந்த விண்ணப்பத்திற்கு உரியதான ஜனாதிபதி நிதியத்திலோ அல்லது வேறு நிறுவனங்களிலோ விண்ணப்பம் கோரியோ அல்லது நிதி செலுத்தியிருந்தாலோ அதுதொடர்பான விபரங்கள்
   - 5.1 நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம்..................................................................
     ...........................................................................................................................
   - 5.2 செலுத்தப்பட்ட பணத்தொகை...................................................................................
   - 5.3 கணக்கு இலக்கம் / குறிப்பு எண்:..................................................

இல. 97, மருதானை வீதி, கொழும்பு - 10. இலங்கை
தொ.பேசி. இல. 011-4873900-5/பக்ஸ் : 0112 323006
**Email:** mail@ nitf.lk **Website:** www.nitf.lk

6. விண்ணதாரியின் அறிக்கை

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மை என்றும் மற்றும் பிழையற்றது இந்த கூற்றுக்கள் மேலேயுள்ள 05ஆவது பந்தியின் அடிப்படையில் வேறு நிறுவனத்தில் இருந்து, வேறுமுறையில் அல்லது இதுதொடர்பில் விண்ணப்பிக்கவில்லையென இதன் மூலம் உறுதிப்படுத்துகின்றோம்.

திகதி.................................... விண்ணப்பதாரியின் கையொப்பம்

7. கிராமசேவகரினால் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். (தேவையற்ற சொற்களை அகற்றவும்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அடங்கிய..........................................திரு/திருமதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை தொடர்பான ஆவணங்கள் உண்மை மற்றும் பிழையற்றது என்றும், அவரது காப்புறுதி உரிமைக்கு தேவையான நடவடிக்கை தொடர்பாக பரிந்துரை செய்து இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

கையொப்பம்:..............................

பெயர்:.........................................
திகதி........................................
கிராம சேவகர் பிரிவு / இலக்கம்................................
(உத்தியோகபூர்வ முத்திரை இடுதல் அத்தியாவசியமானது)

<u>விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்</u>

1. நோயை உறுதிப்படுத்தும் சான்றிதழ் நகல் (நோயாளியின் பெயர், வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட திகதி, மற்றும் வைத்தியசாலையில் இருந்து வெளியேறிய திகதி, மற்றும் சிகிச்சையளிக்கப்பட்ட வைத்தியரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை பதித்தல் அவசியம்)
2. வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட தினத்திலிருந்து வைத்திய பரிந்துரைகளின் அடிப்படையில் விலைக்கு வாங்கப்பட்ட அல்லது வைத்திய பரிசோதனைக்கு உரிய பற்றுச் சீட்டுக்களின் அசல் பிரதிகள் மற்றும் வைத்திய பரிந்துரைகள்.
3. தனியார் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றிருந்தால் அதற்கு உரிய பணம் செலுத்துவதற்கான பணம் வைப்பு ரசீது (Deposit Receipt) விபரங்களடங்கிய பற்றுச்சீட்டு (Final Bill) இறுதிப் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு (Final Cash Payment Receipt)
(மிகமுக்கியமானது: பற்றுச்சீட்டுக்களுக்கு மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பது முக்கியமானது என்பதுடன் ஏனைய பற்றுச்சீட்டுக்களின் நகல்களுக்கு நிதி செலுத்தப்படாது என்பதை கவனத்திற் கொள்க.)
4. உறுதிப்படுத்தப்பட்ட உங்களது வங்கிகணக்குப் புத்தகத்தின் நகல்
5. உறுதிப்படுத்தப்பட்ட ஓய்வூதிய காட் பத்திரத்தின் நகல்
6. உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நகல்

<u>ஏனைய ஆலோசனைகள்</u>

1. விண்ணப்பத்தை வைத்தியசாலையில் இருந்து வெளியேறி 90 நாட்களுக்குள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
2. உங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கிராமசேவரினால் மாத்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
3. அக்ரஹார பாதுகாப்பு காப்பீடு திட்டத்தின் கீழ் வைத்தியசாலையில் தங்கியிருந்து பெற்றுக் கொள்ளப்படும் சிகிச்சைகளுக்காக மாத்திரம் காப்புறுதி நன்மைகளை வழங்குவதோடு உறுப்பினருக்கு மாத்தரம் இந்த காப்புறுதி திட்டத்தின் கீழ் நன்மைகள் வழங்கப்படும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட உறுத்துடையவரது விண்ணப்பத்துடன் தேவையான ஆவணங்களை ஒரே தடவையில் சமர்ப்பிப்பதன் ஊடாக துரிதமாகவோ அல்லது தாமதமாகவோ உங்களது காப்புறுதி நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.